**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**OS. 445/2023**

பெயர் : சதீஷ்பாபு (PW1) (Cross)

த/க/பெ. :

தேதி :15.07.2025

சாட்சி நீதிமன்றம் ஆஜராகி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

**9 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் பி.காம். வரை படித்துள்ளேன். 28.05.1973 பிறந்த தேதி. வழக்குசொத்து உள்ள திருச்சம்பள்ளி வல்லத்தில் தான் நான் பிறந்தேன். என் தந்தை பூர்வீகம் செம்பனார்கோவில். பூர்வீக வயல் வல்லத்தில் உள்ளது. நாராயணசாமி என் பாட்டானருக்கும் வல்லத்தில் சொத்துக்கள் உள்ளன, வீடுகள் கிடையாது. நாராயணசாமி இருந்ததும் வல்லம்என்றால்சரியல்ல. பரசலூர்மெயின்ரோடு. பரசலூர் வல்லத்தில் இருந்து சுமார் 1 கி.மீ இருக்கும். பரசலூரிலிருந்து நடந்து செல்லக்கூடிய தூரம் தான் வழக்கு சொத்து. என் தந்தையும் பரசலூர் மெயின் ரோட்டில் தான் வசித்து வந்தார். நான் அங்கு தான் வசித்து வருகிறேன். எனக்கு திருமணம் ஆகிவிட்டது. நான் ஒரே பையன் தான். என் தந்தைக்கு மற்றொரு மகன் ஜெயபிரகாஷ் நாராயணன் இறந்துவிட்டார். நாராயணசாமி இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். நாராயணசாமி இறப்பு சான்றை நான் தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தந்தை இறப்பு சான்று தாக்கல் செய்துள்ளேன். தாக்கல் செய்யாமல் வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக பதிவு பத்திரம் என் பெயரில் இல்லைஎன்றால் சரிதான். என் தாத்தா பெயரில்உள்ளது பொதுசொத்து. என் தந்தை பெயரிலும் எவ்வித பதிவு ஆவணமும் இல்லைஎன்றால் சரிதான். நாராயணசாமியின் மூலபத்திரம் உள்ளது. நாராயணசாமி பெயரில் அடங்கல், பட்டா, சிட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா வாங்கவில்லை. என் தகப்பனார் பெயரிலும் அடங்கல், பட்டா, சிட்டா இல்லை என்றால் சரிதான். என் பெயரிலும் அடங்கல், பட்டா, சிட்டா இல்லை என்றால் சரிதான். என் தகப்பனார் பெயரிலோ, என் பெயரிலோ பட்டா சிட்டா மாற்ற நடவடிக்கை மேற்கொள்ள வில்லை என்றால் சரிதான். பொது சொத்து என்பதால் செய்யவில்லை. வா.சா.ஆ. 2 பாக பிரிவினை ஆவணத்தை தவிர வழக்கு சொத்திற்கு எங்களிடம் வேறு பதிவு செய்யப்பட்டஆவணம் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1- 1946 ம் ஆண்டு பாக பிரிவினை ஆவணத்தில் வழக்கு சொத்து இல்லை

என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை 9ம் பிரதிவாதி 1985 ல் 8- ம் பிரதிவாதியிடம் இருந்து கிரயம் வாங்கி உள்ளார் என்றால் நான் கிரயம் கொடுக்கவில்லை. 9ம் பிரதிவாதி கிரயம் பெற்றதை தெரிந்துக் கொண்டேன் என்றால் வில்லங்கம் பார்த்து தெரிந்துக் கொண்டேன். வழக்கு சொத்திற்கு நான்கெல்லை குறிப்பிடவில்லை என்றால் எனக்கு தெரியாது. எந்த ஆவணத்திலும் நான்கெல்லை இல்லை என்றால் தெரியவில்லை. 1985 ல் முதல் வழக்கு சொத்து 9 ம்பிரதிவாதியின் வசத்தில் உள்ளது என்றால் சரிதான். 9 ம்பிரதிவாதிக்கு வழக்கு சொத்திற்கு அருகே நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். அவர் சொத்து என்பதால் சாகுபடி செய்து வருகிறார். டிடிசிபி அனுமதி பெறுவதற்கு முன்பே அவர் வழக்கு சொத்துக்களை சாகுபடி செய்து வந்தார் என்றால் சரிதான். ஸ்ரீ ஈஸ்வரி நகர் என் ற பெயரில் வழகக்கு சொத்து மற்றும் அவரது ொசத்தை சேர்த்து டிடிசிபி அனுமதி பெற்று மனை பிரிவு விற்பணை செய்து வருகிறர் என்றால் எனக்கு தெரியாது. மனை பிரிவிற்கு விளம்பர பலகை உள்ளதுஎன்றால் எனக்கு தெரியாது. டிடிசிபி அனுமதிக்கு முன்பு ஆட்சேபணை குறித்து நாளிதழ் விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. டிடிசிபி அனுமதி பெற்று 25 மனை 3 ம் நபர்களுக்கு விற்கபட்டது என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கிற்காக அவ்வாறு தெரியாது என்று சொல்கிறேன் என்றாலும் கிரயம் பெற்ற 3ம் நபர்பகள் வீடு கட்டியுள்ளார்கள் என்றாலும் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் வச பரிகாரம் கேட்கவில்லைஎன்றால் சரிதான். எங்கள் உரிமையை தான் கேட்கிறோம். டிடிசிபி அனுமதி திருச்சம்பள்ளி ஊராட்சிக்கு ரோடு மற்றம்பொது உபயோகத்திற்கு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் எனக்குதெரியாது. தான சொட்டில் மெண்ட்டை ரத்து செய்ய பரிகாரம் கேட்வில்லைஎன்றால்சரிதான். நான் திருச்சம்பள்ளி பஞ்சாயத்து அதிகாரி மற்றும் டிடிசிபி அதிகார அமைப்பை வழக்கில்சேர்க்கவில்லைஎன்றால் சரிதான். தற்போதுசொத்திற்கான வருவாய் ஆவணங்களை தாக்கல் செய்ய இயலுமா என்றால் இயலாது. வழக்குசொத்து எந்த காலத்திலும் நாராயணசாமி அனுபவத்தில் இல்லைஎன்றாலும் பொய்யான ஆணத்தின் அடிப்படையில் வழக்கு போட்டுள்ளேன் என்றாலும் அதனால் தான் 1946 பாகபிரிவினை ஆவணத்தில் வழக்கு சொத்து இல்லை என்றால் சரியல்ல. 9 ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. சிட்டாடங்கல் அவர் பெயரில் உள்ளது என்றால் தெரியாது. டிடிசிபி அனுமதி ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் என்றால் தெரியாது. நான் 40 வருட

காலத்திற்கு பின்னர் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளது சட்டத்தின் முன் நிலைக்க கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பாக பிரிவினைக்கு உட்பட்டது அல்ல என்றால் சரியல்ல. பொய்யான ஆவணத்தின் அடிப்படையில் வழக்கு சொத்துக்கு உரிமை கோருகிறேன் என்றால் சரியல்ல. 9 ம் பிரதிவாதி வரி செலுத்தி வருகிறார் எ ன்றால் இருக்கலாம்எனக்கு தெரியாது. வழக்கு காலாவதியால் பாதிக்கப்பட்டது என்றால் தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.